Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO. 1934/2024
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நெடுமாறன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சுப்பிரமணி | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 14th day of May 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரி ஆஜர்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறேன். எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் படித்து பாரத்துதான் கையொப்பம் செய்தேன்.

குற்றம் சாட்டப்பட்டவர் எனக்கு கொடுத்த 16.09.2024 தேதியிட்ட ரூ.7,00,000/- க்கான பேக்ங் ஆப் இந்தியா வங்கி, திருப்பத்தூர் கிளை காசோலை எண்.012981 அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) மேற்படி காசோலைக்கான 01.10.2024 ம் தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திருப்பத்தூர் கிளை ரிட்டன் மெமோ அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 04.10.2024 ம் தேதியில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 07.10.2024ம் தேதியில் எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பை அவர் பெற்றுக்கொண்டதற்கு ஆதாராமான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். ( அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது)

எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு திருப்பப்பட்ட உறையுடன் கூடிய அஞ்சல் அசல் தாக்கல் செய்கிறேன் (அந்த ஆவணம் என்னால் **பு.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

புகார் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோலுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கபடுகிறது.